**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :
Miscellaneous :
Preliminary register :
Sessions :

Sessions Case No. 58 of 2020

Deposition of witness for :
:

Prosecution : PW- 14
Defence :
Court :

Name : Srivithiya Srinivasan
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2023.**

முதல் விசாரணை :

நான் தற்போது சென்னை தடவியல் அறிவியல் துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.04.2019 அன்று உதவி இயக்குநராக துப்பாக்கியியல் பிரிவில் பணிபுரிந்த போது காவலர் எண்.1785 திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மூலமாக ஊத்தங்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்ற க.எண்.573/2019 நாள்.04.04.2019 அதில் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்துக்கள் சரியான முத்திரையுடன் எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது. அதில் 1 இன சொத்து ஒன்று ஒற்றை குழல் முன் வழி நிறமும் நாட்டு துப்பாக்கி 2. இரண்டு இரும்பு குண்டுகள் 3. ஆரஞ்சு நிற பவுடர் 4. கருப்பு நிற பவுடர் 5. தேங்காய் நாரு. 6. வெள்ளை நிற முன்டா பனியன் 7. நேவி புளூ அரைக்கை டீ சட்டை 8. நீள வெள்ளை முழுக்கை சட்டை மேற்படி வழக்கு சொத்து துணை இயக்குநர் உடன் இணைந்து ஆய்வு செய்யப்பட்டன. அதில் 1 ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கி அது உபயோகப்பட்டு இருந்ததற்கான எரிந்த நிலையில் உள்ள துகல்கள் கண்டு பிடிக்கப்பட்டது. மேற்படி துப்பாக்கி இயங்கும் நிலையில் இருந்தது. மேற்படி துப்பாக்கி தற்செயலா வெடிக்கக்கூடிய தன்மையில் இல்லை. 2-ல் இரும்பு குண்டுகள் ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கியில் குண்டுகளாக உபயோகப்படுத்தக்கூடிய குண்டுகள் ஆகும். மேற்படி குண்டுகள் மேற்படி துப்பாக்கியில் இருந்து 30 கெஜ தூரத்தில் இருந்து சுட்டால் தீவிரமான காயங்களை ஏற்படுத்தும். 3 ஆரஞ்சு நிற பவுடரில் ஆய்வு செய்ததில் அதில் Percussion CAPS செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் பொருள் ஆகும். 4-ல் கறுப்பு நிற பவுடரில் கண் பவுடர் குறிய வேதி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது மேற்படி துப்பாக்கியில் உந்து எரி பொருளாக பயன்படுத்தக்கூடியது. தேங்காய் நார் மேற்படியில் துப்பாக்கியில் தடுப்பு பொருளாக பயன்படுத்தக்கூடியது ஆகும். முன்டா பனியனில் வலது முன் பக்க தோள் பகுதியில் இருந்த இரண்டு துளைகள் இரும்பு குண்டு துளைத்ததனால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அரைக்கை டீசர்ட் வலது கை பின் பகுதியில் 17.07 சென்டி மீட்டர் x 4.5 Cm அளவிலான கிழிதலின் துப்பாக்கி சுட்ட வெப்பத்தின் மற்றும் எரி பொருளின் விளைவினால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எனவே மேற்படி துளை கிழிதல் துப்பாக்கி சூட்டினால் சுமார் 3 அடி தூரத்தில் இருந்து சுடப்பட்டதால் ஏற்பட்டது ஆக கருத்து வழங்கப்பட்டது. முழுக்கை சட்டையில் துப்பாகி சுட்டதனால் ஏற்பட்ட எந்தவிதமான துளை இல்லை. மேற்படி விவரங்கள் அடங்கிய ஆய்வறிக்கை BALL 29/2019 நாள்.31.07.2019 அன்று மேற்படி நீதிமன்றத்திற்கு கடித எண்.1533/2019 நாள்.26.08.2019 அன்று நியமிக்கப்பட்ட பாலகிருஷ்ணன் காவலர் மூலமாக 28.08.2019 அன்று ஆய்விற்கு பின்னர் ஆய்வறிக்கை உடன் மற்றும் மேற்சொன்ன 8 பொருட்களும் ஆய்வக முத்திரையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆய்வறிக்கை அ.தா.சா.8. இது சம்பந்தமாக காவலர் விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

05.04.2019 தேதியிட்ட கடிதத்தினை ஊத்தங்கரை காவல் நிலைய காவலர் எடுத்து

வந்து கொடுத்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை 1 முதல் 8 வரை உள்ளவரை போலீஸ்சார் கொண்டு வந்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பொருட்களை ஆய்விற்காக எவ்வளவு காலம் வைத்திற்கு பிறகு திருப்பி அனுப்பினேன் என்றால் சுமார் 4 மாத காலம் பொருட்கள் ஆய்வகத்தில் இருந்தது. எனது ஆய்விற்கு இரட்டை குழல் துப்பாக்கி வந்ததா ஒற்றை குழல் துப்பாக்கி வந்ததா என்றால் ஒற்றை குழல் துப்பாக்கி வந்தது. ஒற்றை குழல் துப்பாக்கி என்பது குழலில் நீளம் வெவ்வேறு அளவுகளிளும் மாறுபட்ட துப்பாக்கிகளில் காணப்படும் என்றால் சரிதான். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட துப்பாக்கின் நீளத்தின் அளவு சொல்ல இயலாது என்றால் அறிக்கை குறிப்பிட்டபடி 154.8 cm இருந்தது. வழக்கின் சொத்தான இரண்டு இரும்பு குண்டுகளை தவிர வேறு ஏதேனும் குண்டுகள் ஆய்விற்கு அனுப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி துப்பாகியின் மூலம் உபயோகப்படுத்தப்பட்ட குண்டுகளை வேறு குண்டுகளுடன் ஒப்பிபீடு ஆய்விற்கு உள்படுத்தாமல் அனுப்பட்பட்ட இரண்டு இரும்பு குண்டுகள் அத் துப்பாக்கியில் உபயோகிக்க இயலும் என்று கூற இயலாது என்றால், இந்த துப்பாக்கியில் உபயோக்கிக்க முடியும் என்று கருத்துரை வழங்கி உள்ளேன். வழக்கு சொத்தான ஒற்றை குழல் துப்பாகக்கியை ஒரு முறை பயன்படுத்தினால் ஒரு குண்டு மட்டுமே வெளி வரும் என்றால் சிறிய ரக குண்டுகளை பயன்படுத்தினால் அதற்கு ஏற்றார் போல் வெளிவரும். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட இரும்பு குண்டுகள் பெரிய ரகமான குண்டுகள் ஆகும். மேற் சொன்ன குண்டுகளுக்கு சிறிய ரக உபயோக படுத்தப்பட்டால் அவைகள் மொத்தமாக வர வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. பெரிய குண்டுகளை உபயோகப்படுத்தி ஒருமுறை இயக்கினால் ஒரு குண்டு மட்மே வெளி வரும் என்றால் துப்பாக்கியில் எத்தனை குண்டுகள் பொறுத்தப்பட்டு உள்ளதோ அதற்கு ஏற்ப எரிபொருள் உள்ளதன் அடிப்படையில் அத்தனையும் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும் ஒன்றாக வரும். எரிபொருள் மிக குறைவாக இருந்தால் ஒரு குண்டு மட்டும் வருவதற்கும் வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. இருசக்கரவாகனத்தில் இரண்டு நபர்கள் அமர்ந்து பயணம் செல்லும் போது அவர்களுக்கு பின்னால் இருந்து துப்பாக்கியை இயக்கினால் மேற்படி இரண்டு நபர்களின் மீதும் குண்டுகள் பாய வாய்ப்பு உள்ளது என்றால் அதை உறுதியிட்டு கூற இயலாது. இருசக்கர வாகனத்தில் வாகனத்தை ஓட்டி செல்பவரின் அல்லை (வயிறு) பகுதியில் துப்பாக்கி குண்டு இருக்கும் எனில் அவருக்கு பின்னால் அமர்ந்து வருவோரின் உடலை துளைத்தே வர இயலும் என்றால் அரிதி இட்டு கூற இயலாது. ஒற்றை குழல் துப்பாக்கியின் குண்டுகள் தூரம் அதிகமாக சிதறல் ஏற்படும் என்றால் சரிதான். ஒற்றை குழல் துப்பாக்கியின் மூலம் இயக்கப்படும் போது 15 அடி தொலைவை குண்டு கடக்கும் நிலையில் மட்டுமே சிதறல் ஏற்படும் என்றால் அதை விட குறைந்த தூரத்தில் சிதறல் குறைவாக காணப்படும். மேற்படி ஒற்றை குழல்

துப்பாக்கியின் 3 அடி தொலைவில் இருந்து சுடப்பட்டால் குண்டுகள் சிதற வாய்பில்லை என்றால் குறைவான தூரத்திற்கு ஏற்றால் போல் சிதறும். 3 அடி தொலைவில் இருந்து சுடப்பட்டால் 1 அடி விட்ட பகுதி அளவிற்கு சிதர வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அயிட்டம் 6 கையில்லா பணியனில் துப்பாக்கி குண்டுகள் துளைத்தற்கான அறிகுறிகள் இல்லை என்றால் சரியல்ல, முன் வலது பக்கத்தில் இரண்டு இரும்பு குண்டுகள் துளைத்தற்காக துளைகள் உள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. மேற்படி பணியனில் முன் பகுதியில் துளைகள் உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது, என்றால் சரிதான். பின்னால் இருந்து துப்பாகியால் சுடப்படும் நிலையில் ஒரு நபருக்கு அடுத்து அமர்ந்து உள்ள நபர் மீது பின்புறமாக குண்டு பட்டால் அயிட்டம் 6 பணியனின் குண்டு உள்ளவாரு துளை ஏற்பட வாய்ப்புபில்லை என்றால் ஆய்வு செய்ததின் அடிப்படையில் கூறயியலும் இடத்தை பொறுத்து மாறுபடலாம் எவ்வகையில் நடந்து இருக்கும் என்பதை கூற இயலாது. அயிட்டம் 8 சட்டையில் குண்டுகள் துளைத்ததற்ககான துளை எதுவும் இல்லை என்றால் சரிதான். சட்டை அணிந்து இருக்கும் நிலையில் சட்டையில் துளை ஏற்படுத்தியிருந்தால் மட்டுமே அதற்குள் அணிந்திருக்கும் பணியனில் துளை ஏற்படக்கூடும் என்றால் சரிதான், ஆய்விற்கு உள்படுத்தப்பட்ட மேற்படி முழுக்கை சட்டையும் கையில்லா பணியனும் வெவ்வேறு நபர்கள் அணிருந்தது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரை கை டீ சர்ட் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி டீ சர்ட்டில் முன் பகுதியில் எந்த துளைகளும் இல்லை என்றால் சரிதான். மேற்படி டீ சர்ட்டில் வலது கை பின் பக்க பகுதியை தவிற வேறு எந்த பகுதியிலும் கிழித்தல் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அரை கை டீ சர்ட்டில் கிழித்து உள்ளதாக காணப்படுகிறதா தவிற குண்டு பாய்ந்ததாக காணப்பட வில்லை என்றால் சரியல்ல ஆய்வறிக்கை அடிப்படையில் துப்பாக்கி சுட்டதினால் ஏற்பபட்ட கிழித்தல் என்று அறிக்கையில் விவரவிக்கப்பட்டுள்ளது.

Sub

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uth